# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,130 — 1960 මැයි 13 වැනි සිකුරාදා — 13.5.1960

12,130 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 109 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 111 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நானுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சௌக்கியப் பகுதி

#### வைத்திய ஆய்கூட உதவியாளர் பரீட்சை

சௌக்கியப் பகுதியில் ஆய்கூட உதவியாளர்களாகப் பயிற்சியளித்து இரண்டாந்தர ஆய்கூட உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் பரீட்சார்த்திகளிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் விண்ணப்ப மாதிரிப்பத்திரத்தைப் போல எழுதி, நிரப்பி ரூபா 10 பெறுமதியான தபால் முத்திரையை ஒட்டி அதன்மீது கையொப்பமிட்டு 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியிலன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக்கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களைப் பதிவுத்தாபாலில் அனுப்பிவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும், இத்தபால் முத்திரையின் பெறுமதியான பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**2. சம்பள விகிதம்.**—வைத்திய ஆய்கூட உதவியாளர்களின் சம்பள விகிதம் பின்வருமாறு :—

விசேட தரம் : வருடத்துக்கு ரூபா 4,800—180 ல் 3 ம் 240 ல் 1 ம்—5,580.

முதலாந்தரம் : வருடத்துக்கு ரூபா 2,940—120 ல் 8 ம் 180 ல் 4 ம்—4,620.

இரண்டாந்தரம் : வருடத்துக்கு ரூபா 1,020—120 ல் 15—2,820. (வருடத்துக்கு ரூபா 1,500 க்கு முன்பும் ரூபா 2,220 க்குமுன்பும் திறமைத்தடைப் பரீட்சையுண்டு).

**3. சேவை நிபந்தனைகள்**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச்சம்பளத்தையுமுடையது. இந்நியமனம் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்த நிலையிலிருக்கும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் பெண் பரீட்சார்த்திகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையான பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

(இ) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகளின் பயிற்சிக் காலம் ஒரு வருடமாகும். பயிற்சிக்கால முடிவில் நடாத்தப்படும் எழுத்துப்பரீட்சையிலும் செய்முறைப்பரீட்சையிலும் அவர்கள் சித்தியெய்த வேண்டும். இதில் சித்தியெய்தாத பரீட்சார்த்திகள் விலக்கப்படுவர். எனினும் ஆகக்கூடியது 3 தடவைகள் இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடும். சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்கு வைத்திய ஆய்கூட தொழில் நுட்பவியலில் விசேஷ தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். காலித்தானங்கள் ஏற்படும் சமயத்தில், இவர்கள் மூன்று வருடப் பரீட்சார்த்த நிலையில், இரண்டாந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர்களாக நியமிக்கப்படுவர்.

(ஈ) பயிற்சிக்கு அனுமதிக்கப்படும் திகதியிலிருந்து ஏழு வருடகாலம் சௌக்கியப்பகுதியில் சேவை செய்வதெனவும் தவறினால் தாங்கள் சம்பளமாகவும் பயிற்சிக்கால வேதனமாகவும் (அலவன்ஸ்) பெற்ற பணம் முழுவதையும் திருப்தித்தருவதாகவும் உறுதிமொழிகூறும் ஒரு ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும், பொறுப்புள்ளவர்களின் உறுதிமொழியோடு, தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் கையொப்பமிட வேண்டும்.

(உ) பயிற்சிக்காலத்தின்போது மாதமொன்றுக்கு ரூபா 75 வீதம் அலவன்ஸ் வழங்கப்படும்.

(ஊ) மூன்ருந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர்கள், ஆய்கூட உப உதவியாளர்கள் ஆகியோரின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்காலத்தில் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவர். மூன்ரும் பந்தியில் கூறியுள்ள பிரகாரம் பரீட்சையில் இவர்கள் சித்தியெய்தியவுடன், சித்தியெய்திய திகதியிலிருந்து இவர்களது நியமனம் உறுதிப்படுத்தப்படும். சித்தியெய்தத்தவறினால் இவர்கள் முன்னைய பதவிக்கு மாற்றப்படுவர்.

(எ) வைத்திய ஆய்கூட உதவியாளர்கள், ஞாயிற்றுக்கிழமைகள், மற்றும் பொதுவிடுமுறைநாட்கள் உட்பட வாரத்தில் ஏழு நாட்களுக்குக் கடமையாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவர். அவர்கள் வாரத்தில் ஏழு நாட்களுக்கு இரவில் அல்லது பகலில் எச்சமயத்திலும் கடமையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

(ஏ) நியமனம் பெறுபவர்கள், இதுகாலவரை உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் அரசாங்க மொழிக்கொள்கையின் கட்டளைகள், விதிகள், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட விதிகளை நடைமுறையில் கையாண்டு, அவைகளுக்கு அமைந்து நடக்கவேண்டும்.

(ஐ) நியமனம் பெறுபவர் தனது பரீட்சார்த்தமான காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். இவர்கள் சிங்கள மொழியில் ஒரு தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்தே பரீட்சார்த்தமான கால முடிவில் பதவியில் உறுதி பெறுவர்.

(ஒ) பரீட்சார்த்தமான காலத்தில், விதிக்கப்பட்ட திறமைத்தரத்தைச் சிங்களத்தில் எய்தத்தவறுவோர் வேலையினின்று நீக்கப்படலாம் ; ஆனால் பொருத்தமான அதிகாரி, அரசாங்க பாஷையைக் கற்பதற்கு உண்மையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுவாராஞல் அவ்வாறு நீக்கப்படுவது தள்ளிவைக்கப்படலாம். பரீட்சார்த்த நிலையிலுள்ள உத்தியோகத்தர் உரிய தேதியின் பின்னர் நியாயமான ஒரு காலத்துள் குறித்த பரீட்சையிற் சித்தியெய்துவாராஞல், பொருத்தமான அதிகாரி தமது உசிதாசாரப்படி அவர் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொடுக்கலாம்.

(ஓ) சிங்கள மொழிமூலம் இப்பரீட்சையை எடுத்து அரசாங்க சேவையில் சேருபவர்கள் சிங்கள மொழியில் தகுதிகாண் பரீட்சையை எடுக்கவேண்டியதில்லை.

**குறிப்பு.**—(அ) வைத்திய ஆய்கூட உதவியாளர் சேவையில் " முன்பு சேர்ந்தவர்கள் " (ஏ) ஆம் (ஐ) ஆம் (ஒ) ஆம் உபபந்திகளின் விதிமுறைகளுக்கு விலக்கானவர்கள்.

(ஆ) 24.9.56 க்கு முன்பு ஆய்கூட உப உதவியாளர்களாகவும் மூன்ருந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர்களாகவும் நிரந்தரமான நியமனங்களைப் பெற்றவர்களிடையே இரண்டாந்தர ஆய்கூட உதவியாளர்களாக நியமனம் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். அரசாங்க மொழிக்கொள்கையின் காரணத்துக்காக " முன்பு சேர்ந்தவர்களாக "க் கருதப்படுவர்.

**4. தேவையான தகைமைகள்.**— (i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணும் விஷயங்களில் திருப்தியேற்படும்படியான ஆதாரங்களைக் காட்டுதல் வேண்டும் :—

(அ) 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதியில் 17 வயதுக்கு மேற்பட்டவராயும் 25 வயதுக்கு உட்பட்டவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப்பகுதியின் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு மேலான பரீட்சையில், ரசாயன சாஸ்திர பாடத்தில் திறமையான சித்தியுடனும் பௌதீக சாஸ்திரம், விலங்கியல், தாவரவியல், சீவசாஸ்திரம் ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்தியெய்தியும் இருக்கவேண்டும்.

**(ii)** சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களும் சௌக்கியப்பகுதியில் 3 வருடங்கள் திருப்திகரமான சேவை செய்துமுடித்தவர்களுமான ஆய்கூட உபஉதவியாளர்களும் மூன்றுந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

**(iii)** சௌக்கியப்பகுதியில் மூன்றுந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர்களாக 5 வருடங்கள் திருப்திகரமான சேவை செய்து முடித்தவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

**5.** விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகளைமட்டும் சேர்த்து அனுப்புதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பதாரரின் வயதை எடுத்துக்காட்டும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (ஞானஸ்நானப் பத்திரம், பிறப்புச்சத்தியப்பத்திரம், சாதகம், பாடசாலைத் தேவைகட்கு உபயோகித்த பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) ஆகக்கூடிய கல்வித்தகைமைத் தராதரப் பத்திரங்களின் பிரதிகள்.

(இ) விண்ணப்பதாரரின் கல்வித்த கைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்குத் தகுதியுள்ளமை ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அண்மையில் பெறப்பட்ட மூன்று சான்றுப் பத்திரங்கள் (அரசாங்க சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்பவேண்டியதில்லை).

**குறிப்பு.**—இவற்றைப் பரீட்சார்த்திக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

**6.** 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ந் திகதி கொழும்பில் நடைபெறும் ஒரு போட்டிப்பரீட்சையின் முடிவைக்கொண்டே தேர்வு நடைபெறும்.

பரீட்சைப்பாடங்கள் பின்வருமாறு :—

(1) பாஷையும் வியாசமும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்)—100 புள்ளிகள்.

(2) பொதுப்பரீட்சை (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்)—150 புள்ளிகள்.

(3) பொது விஞ்ஞானம் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்)—200 புள்ளிகள்.

(4) சாதாரண விஷயத்தைப்பற்றிய ஒரு ஆங்கிலக் கட்டுரை—முதலாவது பாடமான பாஷையையும் வியாசத்தையும் ஆங்கில மொழியில் எடுக்காதவர்கள் அனைவரும் கனிட்ட பாடசாலை தராதர நிலையில் நடைபெறும் இப்பாடத்தை (ஆங்கிலக் கட்டுரை) எடுக்கவேண்டும். இப்பாடத்தில் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் திறமை காரணமாக நியமனம் பெறும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா—100 புள்ளிகள்.

**குறிப்பு.**—பொதுப்பாடப் பரீட்சை : நெடுங்கூட்டல், பொது விவேகம், பொது அறிவு ஆகிய மூன்று பாகங்களைக் கொண்டிருக்கும்.

பொது விஞ்ஞானம், ரசாயன சாஸ்திரம், பௌதீக சாஸ்திரம், தாவரவியல், விலங்கியல், சீவசாஸ்திரம் ஆகியன்வற்றில் பரீட்சார்த்திக்கு இருக்கும் அறிவைப் பரீட்சிக்கும் பொருட்டு வினாக்கள் தயாரிக்கப்படும். ரசாயன சாஸ்திர பாடக் கேள்விகளுக்குக் கட்டாயமாக விடையளிக்கவேண்டும். பௌதீக சாஸ்திரம், தாவரவியல், விலங்கியல், சீவசாஸ்திரம் ஆகிய பாடங்களின் கேள்விகளில் பரீட்சார்த்தி விரும்பிய ஒன்றிற்கு விடையளிக்கலாம். சிரேட்ட பாடசாலைத் தராதர நிலையில் இக்கேள்விகள் அனைத்தும் அமைந்திருக்கும்.

**பரீட்சை எடுக்க வேண்டிய மொழி**

பரீட்சார்த்தி தனது கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்து சித்தியெய்தினரோ அதே மொழியில் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) இப்பரீட்சையையும் எடுக்க வேண்டும். எனினும்,

(அ) வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பாடங்களை எடுத்து கல்வித்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சையில், அந்தந்த மொழிகளில் அந்தந்தப் பாடங்களையும், ஏனைய பாடங்களை முதலாவது எடுக்கும் பாட (பாஷையும் வியாசமும்) மொழியிலும் எடுக்க வேண்டும்.

(ஆ) கல்வித்தகைமைகளுக்கு விதிவிலக்களிக்கப்பட்டு இப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட சௌக்கியப் பகுதியில் ஏற்கனவே கடமையாற்றுபவர்களும் 4 ம் பந்தியிற் கூறப்பட்டுள்ள கல்வித்தகைமைகளிற் சித்தியெய்தாதவர்களுமானவர்கள் தாங்கள் கல்விகற்ற மொழியிலேயே இப்பரீட்சையை எடுக்க வேண்டும்.

(இ) கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையைத் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எடுத்துச் சித்தியெய்திய அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பயிற்றப்பட்ட பரீட்சார்த்தியொருவர் விரும்பினால் சிங்கள மொழியில் இப்பரீட்சையை எடுக்கலாம்.

**7. அடையாளச் சீட்டுகள்**

பரீட்சை மண்டபத்துள், மேற்பார்வையாளர் திருப்தி கொள்ளும்படியான ஒவ்வொரு பாடவேளையிலும் பரீட்சார்த்தி தனது அடையாளச் சீட்டை மேற்பார்வையாளரிடம் காண்பிக்கவேண்டும். இதற்கு ஆதாரமாகக் கீழ்க்காணப்படுவனவற்றில் ஒன்றைப் பரீட்சார்த்தி வைத்திருக்க வேண்டும்.

(அ) தபாற்கந்தோர் தலைமை அதிபதி (போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்) வழங்கிய அடையாளச் சீட்டு.

(ஆ) பரீட்சை நடைபெறும் திகதிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாக எடுக்கப்பட்ட வெளிநாட்டுப்பிரயாணச் சாதனம் (பாஸ்போட்.)

(இ) அரசாங்க பகுதியில் அதிகாரத்தோடு பரீட்சை நடைபெறும் திகதிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாகக் கொடுக்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டதுமான பத்திரம், அனுமதிச்சீட்டு (லைசென்ஸ்) அல்லது வேறு சான்றுப்பத்திரம்.

**8.** எழுத்துப் பரீட்சையில் திருப்திகரமான தரத்தையடைந்த பரீட்சார்த்திகள் ஒரு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம், இடம் ஆகியன காலக்கிரமத்தில் பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியாகத் தெரிவிக்கப்படும். சௌக்கிய சேவை அதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு சபையால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். இதன் தொடர்பான பிரயாணச்செலவுகளும் ஏனைய செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

**9.** விண்ணப்பங்களையும் இதன் தொடர்பான ஏனைய கடிதங்களையும் சௌக்கிய சேவை அதிபதி, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டுமேயொழிய இப்பகுதியில் கடமையாற்றும் எந்த உத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பக்கூடாது.

**10.** தேவையான சான்றுகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**11.** இந்த அரசாங்க வர்த்தமானியின் முதலாம் பாகத்தில் இரண்டாம் உட்பிரிவிலுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களில் பொது நிபந்தனைகள் உமது கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.

செ. பொன்னம்பலம்,
பிரதி சௌக்கிய சேவை அதிபதி.

சௌக்கிய சேவை அதிபதியின் காரியாலயம்,
த. பெ. எண் 500,
கொழும்பு,
1960 ம் ௵ மே ௴ 13 ௳.

## விண்ணப்பப் பத்திரம்

**இரண்டாந்தர வைத்திய ஆய்கூட உதவியாளர் பதவி விண்ணப்பம்**

1. (அ) முழுப் பெயர் :————.
   (ஆ) முகவரி : ————.

2. (அ) 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியில் சரியான வயது : வருடங்கள் ———— மாதங்கள் ———— நாட்கள் ————.
   (ஆ) பிறந்த திகதியும் இடமும் : ————.
   (பிறப்புப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)

3. எந்த நாட்டைச் சேர்ந்தவர் ? : ————.

4. மணமானவரா ? மணமாகாதவரா ? : ————.

5. சித்தியெய்திய பரீட்சையின் விபரங்கள் : ————.
   (பரீட்சையின் பெயர், சுட்டு இலக்கம், திகதி, பரீட்சை எடுத்த ஸ்தானம், சித்தியெய்திய பாடங்கள் ஆகியன)

6. பாடசாலையிலிருந்து விலகியபின் செய்த தொழில் : ————.

7. ஏதாவது விசேட பயிற்சிகள், தகைமைகள், அனுபவங்கள் பெற்றிருந்தால், அவற்றின் விபரங்கள் : ————.

8. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படும் நற்சான்றுப்பத்திரங்கள் வழங்கியவர்களின் (சுற்றத்தவர்களல்ல) பெயர்களும் உத்தியோக விபரங்களும் : ————.

9. பரீட்சார்த்தி இப்பரீட்சையை எடுக்கவிரும்பும் மொழி :————.
   (அ) பாஷையும் வியாசமும் : ————.
   (ஆ) பொது அறிவு : ————.
   (இ) பொது விஞ்ஞானம் : ————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களிலெதுவும் பொய்யானதென்றோ தவறானதென்றோ தேர்வுக்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாகக் கருதப்படுவேனென்றும் நியமனத்துக்குப்பின் கண்டு பிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேனென்றும் நான் நன்கு அறிவேன்.

.....................................
(இவ்விடத்தில் ரூபா 10 பெறுமதியான தபால் முத்திரையை ஒட்டி அதன்மீது கையொப்பமிட வேண்டும்)

திகதி :————.

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### உதவிப் பாதுகாவலர் தெரிவு, 1960

12.2.60 ல் வெளியிடப்பட்ட 12,061 இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை முதல் பாகம் இரண்டாம் பகுதியில் குறிப்பிட்டுள்ள உதவிப் பாதுகாவலர் தெரிவுக்காக 21.5.60 ம் தேதிக்கு ஒழுங்கு செய்திருந்த சோதனை 4.6.60 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பி. டி. றம்பால,
பிரதம தலைவர்.

பிரதம, தலைவர் காரியாலயம்,
இ. அ. பு. கொழும்பு, 3.5.1960.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா " A "

மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிவரையும், நீர்ப்பாசன இலாகாவில், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கெதிரேயுள்ள தொகைக்கும் அதற்குமேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்த ஒப்பந்தக்காரரிடமிருந்து, கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (கண்டி) மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ம் திகதி, கேள்விப்பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப் பத்திரகாரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

| வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரர்களின் பதிவுத் தொகை | கேள்விப்பத்திரத்திற்குரிய கட்டுப்பணம் |
|---|---|---|
| (அ) நுவரெலியாவில் வேலையாட்களின் இரட்டை வீடுகட்டுதல் .. | ரூபா 15,000 அதற்கு மேலும் .. | ரூபா 25 00 |
| (ஆ) கண்டிப்பகுதியின் " கிரிந்த " என்னும் இடத்தில் உள்ள " தலகாக மூல்லா" வாய்க்கால் திருத்தம் செய்தல் .. | ரூபா 5,000 .. | ரூபா 25 00 |

இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 13.5.60 தொடக்கம் 13.6.60 வரை கண்டி நீர்ப்பாசன இஞ்ஜினியரால் அலுவலக நேரங்களில் வழங்கப்படும். மேலே கூறப்பட்ட (அ), (ஆ) தொகைக்கும் அதற்குமேலும் இவ்விலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்பணமாக ரூபா 25 நீர்ப்பாசன இலாகா அதிபர் சார்பாக கச்சேரி அல்லது நீர்ப்பாசன இஞ்ஜினியர் கண்டி, இலாகாவில் பிணைகட்டி அதன் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் அல்லது எப்பகுதியையேனும், ஏற்றுக்கொள்ளவோ மறுப்பதற்கோ சகல உரிமையும் உடையதென உறுதிப்படுத்துகிறது.

கேள்விப்பத்திர முடிவு திகதியின்பின் மூன்று கிழமைகள் வரை, கேள்விப்பத்திரகாரர்கள் தங்கள் கேள்விகளை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

கண்டி நீர்ப்பாசன இஞ்ஜினியர் காரியாலயத்தில் இவ்வேலைக்குரிய விபரங்களை அறிந்துகொள்ளவும்.

நீர்ப்பாசன இலாகா,
கண்டி,
1960 ம் ஆு வைகாசி மீ 4 ம் உ.

சி. த. கந்தையா,
கண்டி நீர்ப்பாசன இஞ்ஜினியர்.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர், அனுராதபுரம் புது நகர் இ.போ.ச. டிப்போவில் வெளிவேலிகள் உள்வேலிகள் ஆகியன அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு மே மாதம் 25 ம் திகதி முற்பகல் 10 மணிக்கு முடிவடையும்.

ரூபா 20,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரே கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றோலைகள் பொரலஸ்கமுவ, வெரஹெரை, இலங்கை போக்குவரத்துச் சபை சிவில் இஞ்சினியரின் பரிசோதனைக்குக் காட்டப்பட்டு அவை அங்கீகரிக்கப்பட்டால் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமுன்பு கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள பிரதான கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐக் கட்ட வேண்டும்.

இலங்கை போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்ட பத்திரங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும். இவை 1960 ம் ஆண்டு மே மாதம் 21 ம் திகதி நண்பகல் 12 மணிவரை சிவில் இஞ்ஜினியரால் வழங்கப்படும். மேலதிக எல்லா விபரங்களும் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
6.5.60.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

## நீர்ப்பாசனத்துறை

மொனருகலை உப-பகுதியிலுள்ள கோங்காவெவத் திட்டத்தை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, த. பெ. இல. 500 ல், 355 ம் இலக்க அறையிலுள்ள விவசாய நில அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ம் திகதி, செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத்துறையிலும், புகையிரதப் பகுதியிலும், பொது மராமத்து இலாகாவிலும் ரூபா 75,000 க்கு அல்லது அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும் மேற்படி கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். பண்டாரவளையிலுள்ள ஊவாப் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெறப்படும் இரு பிரதிகொண்ட கேள்விப் பத்திரங்களை நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும், எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 100 கட்டுப்பணமாய் கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிகமான விபரங்களை பண்டாரவளையிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. செல்லகேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
11.4.1960.